உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி—சக.] விஜய-ஐப்பசி [பகுதி—கஉ.

Vol. 49. October—November 1953 No. 12.

## சங்ககால மன்னர்கள்

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்.
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(247-ம் பக்கத் தொடர்ச்சி)

### இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளி

இவன் சிறந்த பேரரசன்; பலநாடுகளைவென்று அடக்கியாண்டவன்; இராஜசூயம் வேட்டவன்; சிறந்த போர் வீரன் (புறம் 16). இவன் எல்லையில்லாத படையினை யுடையவன்; சிறந்த களிற்றுப் படை யுடையவன்.

இவன், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை என்பவனுடன் போர் புரிந்தவன். திருக்கோவலூரை யாண்ட மலையமான் அப்போரில் இவனுக்குத் துணை புரிந்தனன். ஆதலின், வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் அம்மலையமானைப் பாராட்டிப் பாடியுள்ளார். இவன் ஒரு சேரமானிடம் பகைகொள்ளினும் மாரிவெண்கோ என்னும் சேரமானுடன் நட்புக்கொண்டொழுகினன். இவன் காலத்துப் பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதி. இவ்வழுதியும் சேரமான் மாரிவெண்கோவும் இப்பெருநற்கிள்ளியுடன் ஒருங்கு வீற்றிருக்கக்கண்ட ஔவையார், "நீர் செய்த நல்வினையே நும்மை வாழச்செய்யும், நீவிர் விண்மீன்களினும் பலவாகிய வாழ்நாளைப் பெற்று வாழ்வீர்களாக" என வாழ்த்தியுள்ளார் (புறம் 367). இம்மன்னனைப்பாடிய புலவர்கள் பாண்டரங்கண்ணனார், ஔவையார், உலோச்சனார் ஆவர்.

## கிள்ளிவளவன்

இவன் செம்பியன் மருகன் என மாறோக்கத்து நப்பசலையாரால் குறிக்கப்படுகிறான். ஆதலின், இவன் செம்பியனுக்கு மகனாகவோ பேரனாகவோ ஆகலாம். கிள்ளிவளவனுக்கு முற்பட்டவன் செம்பியன் என்பது மாத்திரம் உறுதி. தலைநகர் உறையூர் (புறம் 43). இவனை நக்கீரர் அகப்பொருட் செய்யுட்களில் குறிக்கிறார். இவனைப் புகழ்ந்து போற்றிய புலவர்கள் ஒன்பதின்மர். அவர்கள் ஆலத்தூர் கிழார், வெள்ளைக்குடி நாகனார், மாறோக்கத்து நப்பசலையார், ஆலூர் மூலங்கிழார், கோவூர் கிழார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார், நல்லிறையனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் ஆவர். இம்மன்னன் சிறந்த போர்வீரன், சிறந்த புலவன், புலவரைப்போற்றிய புரவலன், சோழப் பேரரசன்.

இவன்செய்த போர்கள் பல. பகைவருடைய பொன்முடிகளைக் கொண்டு தனக்கு வீரக்கழலைச் செய்துகொண்டான் ( புறம் 60 ). இவன் எதிர்த்துப்பொருது வெல்லும் படையினையுடையவன் (புறம் 226, 227).

கிள்ளிவளவன் தன் படைகளுடன் கருவூரை முற்றுகையிட்டனன். வீரமானம் அற்ற சேரமான், கருவூர் அரணுக்குள் இன்பமாகக் காலம்கழித்து வந்தனன். இவர்களது செயலைக்கண்ட ஆலத்தூர்கிழார் இவ்வளவனை நோக்கி, "மானமற்றவனொடு பொருவதில் என்ன சிறப்புண்டு? நீவென்றாலும் ஒன்றே, அவனைக் கொன்றாலும் ஒன்றே" எனக் கூறினார். ஆயினும் போர் விரைந்தது. இறுதியில் கருவூர் மன்னன் தோற்றனன். இச்செய்தி மாறோக்கத்து நப்பசலையார் கூற்றால் விளங்குகிறது (புறம் 39). அச்சேரமன்னன் வானவன் என்னும் பெயருடையான் என்பதும் அப்புலவர் வாக்கால் புலனாகிறது. அவ்வானவன் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவனாவன் என்பது முன்னர் விளக்கப்பட்டுளது.

திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்துவந்த மலையமான் எக்காரணம் பற்றியோ இவ்வளவனது சீற்றத்திற்கு ஆளானான். இவ்வளவனுக்கு அம் மலையமான் என்ன தீங்கு செய்தனன் என்பது விளங்கவில்லை. அம்மலையமானை இவன் என்ன

செய்தனன் என்பது விளங்கவில்லை. இவன் மலையமான் மக்கள் இருவரையும் சிறைப்பிடித்துக் கொணர்ந்து, அவர்களை யானையின் காலில் இடறச்செய்யத் தீர்மானித்தனன். இக் கொடுஞ்செயலை யறிந்த கோவூர்கிழார் வளவனைக் குறுகி, 'சிபியின் மரபில் வந்த நீ இச் சிறுவர்களைத் துன்புறுத்தலாமோ'? என உரைத்தார் (புறம் 46). பின்னர் மன்னன் அச் சிறுவர்களை என்ன செய்தனன் என்பதும் விளங்கவில்லை.

இவனுக்கும் பாண்டியனுக்கும் மதுரையில் போர் நிகழ்ந்தது. பாண்டியன் தானைத்தலைவனான பழையன் மாறன் கிள்ளிவளவனுடன் போர்செய்து வெற்றிகொண்டான். வளவன் தோல்வியுற்றனன் என்பதைச் செவியுற்ற சேரமன்னன் கோதை பெருமகிழ் கொண்டான்(அகம் 348). இச்செய்தியை நக்கீரர் கூறியுள்ளார்.

இவ்வளவன் இறுதியிலும் சேரமன்னனொடு பொருது உயிர் துறந்தனன். இப்போர் குளமுற்றம் என்னுமிடத்து நிகழ்ந்தது. இவன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் எனக் குறிக்கப்படுதலினால் இவ்வுண்மை பெறப்படுகிறது. குளமுற்றம் சேரநாட்டது.

இவன் காலத்துச் சோழமன்னன் இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளியாவன். அவனும் சிறந்த பேரரசனாய்த் திகழ்ந்தனன். (இரு சோழமன்னர்களும் கிள்ளிகளே யாவர். ஆதலின் இருவரும் ஒருவராவரோ என்பது ஐயமே; இது ஆய்வுக்குரியது.) இவ்வளவன் சேரமன்னனொடு தொடுத்த போரில் இறந்துபட்டிருத்தல் வேண்டும் எனத் துணியப்படுவதால் இவனது இறுதிக்காலத்தில் சோழப்பேரரசு சுருங்கத் தொடங்கியது. இருபேரரசர்கள் ஆண்டிருக்க, நாடு சுருங்கிற்று என்பதை நோக்கின், இராஜசூயம்வேட்டவனுக்குப் பின்னும் இவ்வளவன் வாழ்ந்தவனாதல் வேண்டும்.

'அரசெனப்படுவது நினதே' என இவனைப் பாராட்டுகின்றார் வெள்ளைக்குடிநாகனார்(புறம் 35). 'செஞ்ஞாயிற்றின்கண் நிலவு வேண்டினும் வெண்திங்களின் வெயில் வேண்டினும் வேண்டிய பொருளையுண்டாக்கும் வன்மையுடையவன் இவன்' எனப் பாராட்டுகின்றார் ஆலூர் மூலங்கிழார் (புறம் 38). இவன் யானைப்படையினை

புடையவன் (புறம் 228). 'அருஞ்சமம் கடக்கும் ஆற்றலன் எனப் போற்றுகின்றார் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் (புறம் 397). இவன் இரவலர்க்கு எளியவன் (புறம் 63, 393, 397). இவன் முத்த மிழை யோம்பினன் (புறம் 226, 227, 228, 386). இவனது நாட்டில் வேள்விகள் மலிந்தன (புறம் 397). இவன் காலத்து அறநூல் ஒன்று தமிழகத்தே விளங்கியது. அதனைப் புலவர்கள் நன்கு அறிந்திருந்தனர் (புறம் 34). அந்நூல் திருவள்ளுவர் அருளிய திருக்குறளாகத்தான் ஆகவேண்டும் என்பது பல அறிஞர்கள் கருத்தாம். உக்கிரப்பெருவழுதியும் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருகாலத்தவர் ஆதலின் அவ்வழுதியின் அவையில் அரங்கேறிய திருக்குறள், வளவன் காலத்துச் சிறப்பொடு விளங்கியது என்பதில் வியப்புமுண்டோ? இவனது தலைநகரில் அறங்கூர வையம் இருந்தது (புறம் 39). இவனது கோட்டைமதிலைச் சூழ்ந்த அகழியில் முதலைகள் வாழ்ந்தன. ஊர்காப்பாளர் இடையாமத்தில் விளக்கெடுத்துக்கொண்டு ஊர்சுற்றிவருவது வழக்கம் (புறம் 37). யாழ்ப்பாணர்கள் இலக்கணமுறைப்படியமைந்த யாழினை வைத்திருந்தனர் (69, 70). நாள்தோறும் வைகறையில் அரசனைத் துயிலெழுப்புவது பாடகர் தொழிலாகும் (397). அரசன் முதலாயினோர் உடலைத் தாழியிற் கவித்தல் அக்கால மரபு(புறம் 228). பாம்பின் தோல் போன்ற மெல்லிய ஆடைகள் அக்காலத்து செய்யப்பட்டன (புறம் 397).

இவன் பண்ணன் என்பானுக்குச் சிறந்த நண்பன். இப்பண்ணனது வள்ளன்மையைச் சிறப்பித்துப் பாடியுள்ளான். இவ்வளவன் "யான் வாழுநாளும் பண்ணன் வாழிய" எனப் போற்றுகின்றான் பண்ணனை (புறம் 173). இப்பண்ணனை இவன் பாடிய செய்யுளால் இவனது புலமைத்திறனும் புலனும்.

---

# திருகு

திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B.A., B.L., சென்னை.

திருகு என்பது ஓர் அற்புதமான எந்திரக்கருவி. நமக்கு அதைப்பார்த்துப் பார்த்து, நன்றாகப் பழகிப்போய்விட்டபடியால், அதன் அற்புதத்தை நாம் சாதாரணமாக உணருவதில்லை; நிச்சயமாக அதைப்பற்றி நினைப்பதே இல்லை.

திருகு என்பது எத்தனை வகையாக நமக்கு உதவுகிறது என்று நம்மால் கணக்கிடவே முடியாது. அது எத்தனை விதமாக வேலைசெய்கிறது என்பதைச் சற்றே எண்ணிப் பாருங்கள். வேறு வேறாக உள்ள இரண்டுபொருள்களை ஒன்றாக இணைக்கவேண்டுமா? ஒன்றாய் இணைந்திருக்கும் இரண்டு பொருள்களைத் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமா? எவ்வளவு கஷ்டப்பட்டு முயன்றாலும் நம்மால் அசைக்க முடியாத கனமான பொருளை எளிதாக உயரத் தூக்கவேண்டுமா? அல்லது, இலேசாகக் கீழே இறக்கவேண்டுமா? ஒருபொருளைக் குரங்குப் பிடியாகப் பிடித்து, அதை அசையவொட்டாமல் ஒரே நிலையில் வைத்திருக்கவேண்டுமா? அல்லது, நிலையாக நிற்கும் ஏதோவொரு பொருளை, மெதுவாகவோ வேகமாகவோ, இயங்கச் செய்யவேண்டுமா? அதை முன்னோக்கிச் செல்லச்செய்ய வேண்டுமா? பின்புறமாக ஓடச்செய்யவேண்டுமா? வேகமாகப் பறக்கவேண்டுமா? நிலையாக நிற்க வேண்டுமா? மண்ணையோ கல்லையுமோ குடைய வேண்டுமா? நீரை இறைக்கவேண்டுமா? பஞ்சை நூற்கவேண்டுமா? கரும்பைப் பிழிய வேண்டுமா? இவைகளை எல்லாவற்றையும், இவை போன்ற காரியங்கள் வேறு பலவற்றையும், இவை போல அல்லாத இன்னும் பல காரியங்களையும் திருகு

---

* இது 22—7—53ல் அகிலஇந்திய வானொலிநிலையத்தில் பேசியது; அந்நிலயத்தார் அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

என்னும் கருவி செய்வதற்கு எப்பொழுதும் தயார். இந்தக் காரியங்களில் பல தம்முள் ஒன்றுக்கொன்று மாறுபட்டவைகளாகத் தோன்றுகின்றன என்பதைக் கவனித்திருப்பீர்கள். இப்படிப் பலவிதமாய் வேலைசெய்யும் கருவி மிகவும் அற்பமாய்த் தோன்றினும், அது மிகமிக அற்புதமானது என்பதற்கு ஐயமே இல்லை.

சக்கரத்தைப் போலவேதான் திருகின் ஆதிச் சரித்திரமும். திருகை முதன்முதலில் கண்டுபிடித்தது யார், எங்கே, எப்பொழுது? என்பவற்றுள் ஒன்றும் நமக்குத் தெரியாது; இனிமேல் தெரிவதற்கும் வழி இல்லை. சக்கரத்தை முதன் முதலில் இன்ன வகையாகக் கண்டுபிடித்திருக்கக் கூடும், இன்ன வகையாக அமைத்திருக்கக் கூடும் என்று ஊகிக்கவாவது முடிந்தது. திருகைக் கண்டுபிடித்தது எப்படி, அதை முதன்முதலில் அமைத்தது எப்படி? என்று ஊகிப்பதற்குக்கூட இடம் இல்லை. ஆனால், அதற்குப் பதிலாக, மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த பேரறிஞர் ஒருவர் திருகை நாம் ஒருவரும் எதிர்பார்க்கவே முடியாத ஒரு துறையில் அற்புதமாகப் பயன்படுத்தியதைப்பற்றிய செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது. அந்த அறிஞர் அதை எதற்கு உபயோகப்படுத்தினார் என்று நினைக்கிறீர்கள்? தண்ணீரை இறைத்து நீர் பாய்ச்சுவதற்கு. இதைக் கேட்ட பிறகும் கூட உங்களால் நம்பமுடியவில்லை அல்லவா?

சுமார் இரண்டாயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன்னே வாழ்ந்த மகாமேதாவியான ஆர்க்கிமீடீஸ் (Archimedes) என்பவரைப்பற்றி நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவர் கிரேக்க நாட்டினர்; ஸைரக்கியூஸ் நகரத்தில் வாழ்ந்தவர். திருகின் உதவியால் தண்ணீரை இறைக்கக் கற்றுக்கொடுத்தவர் அவர்தாம். அந்தக் கருவிக்கு அவருடைய பெயர் இடப்பட்டது. அது 'ஆர்க்கிமீடீஸின் ஸ்குரூ' என்று வழங்குகிறது. அவ்வகையான கருவிகளை எகிப்து நாட்டில் இக்காலத்திலும் அங்கங்கே உபயோகப்படுத்துகிறார்கள்.

இது ஆச்சரியமாக இருக்கிறதே! தண்ணீருக்குள் திருகைத் திருகினால் தண்ணீரை எப்படி இறைக்க முடியும்? என்று கேட்கத்தான் தோன்றும். இதைத் தெரிந்துகொள்வதற்கு எகிப்து நாட்டுக்குப் போகவேண்டியதில்லை.

மரத்தச்சர்கள் சாதாரணமாக மரத்தில் சிறிய துளைகளை இடுவதற்குத் துரப்பணம் என்னும் கருவியை உபயோகிக்கிறார்கள். ஆனால் கப்பிபோட்ட ஜன்னல்கள், கதவுகள், சட்டங்கள் முதலியவைகளைச் செய்யும்போது பெரிய துளைகளை இடவேண்டும். அதற்கு இந்தக் கருவியை அவர்கள் உபயோகிப்பதில்லை. துளைகள் ஆழமாகவும் அகலமாகவும் இருக்கவேண்டுமாதலால் துரப்பணம் என்னும் சிறு கருவி இதற்குப் பயன்படாது. பெரிய துளைகளை இடுவதற்குத் தச்சர்கள் உபயோகிக்கும் கருவிக்கு ஆகர்(auger)என்று பெயர். அது எஃகினால் செய்யப்பட்டது. அதன் ஒருபகுதி பெரிய கார்க்கு-ஸ்குரூவைப் (cork-screw) போல் இருக்கும். அந்தக் கருவிக்கு ஒரு மரப்பிடி இருக்கும். கருவியின் கூரிய எஃகுமுனையை மரத்தில் துளையிடவேண்டிய இடத்தில் அழுத்திக்கொண்டு, கருவியின் மரப்பிடியைப் பிடித்துத் திருகினால் ஆகரின் முனையானது மரத்தைத் துளைத்துக் குடைந்துகொண்டு உள்ளே செல்லும். அப்போது அந்தக் கருவியால் குடைந்தெடுக்கப்பட்ட மரத்தூளானது கருவியின் முறுக்கின் வழியாக வெளியே வருவதைப் பார்க்கலாம். சுற்றிச் சுற்றி ஏறும்படி அமைந்த சுருள்-மச்சுப்படிக் கட்டின் வழியாக நாம் கீழிருந்து, சுற்றுச் சுற்றாக, மேலே ஏறுவது போல், இந்த மரத்தூளும் குடையப்பட்ட கீழிடத்திலிருந்து சுற்றுச் சுற்றாக மேலேறி வெளியே வரும். மரத்தைக் குடையும் ஆகர் கருவியானது கீழிருந்து மரத்தூளை மேலேற்றுவதைப்போலவே, தண்ணீரைக் குடையும் ஆர்க்கிமீடிஸ்-திருகானது தண்ணீரைச் சுற்றுச் சுற்றாக மேலேற்றி, இறைத்து வெளிக்கொணர்ந்து பாய்ச்சுகிறது.

இப்படி மிகமிக விந்தையாக வேலைசெய்யும் திருகு என்னும் கருவியின் தத்துவம் என்ன? சக்கரம் என்னும் கருவியின் தத்துவத்தைப்பற்றிச் சொல்லும்போது, அது நெம்புகோலின் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டது என்று சொல்வது போல, திருகு என்னும் கருவியைப்பற்றிச் சொல்லும்போது, அது சாய்தளத்தின் (inclined plane) தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்று சொல்லவேண்டும். நடுவில் ஒரு தண்டைத் தாங்குகோலாக அமைத்து, அதைச் சுற்றிச் சாய்தளத்தைப்

பொருத்தினால் அதுவே திருகு என்னும் கருவியாக அமையும். இதை எளிதாக நிரூபிக்கலாம்

ஒரு காகிதத்துண்டைச் செங்கோண-முக்கோண வடிவமாக வெட்டினால் அந்த முக்கோணத்தின் கர்ணம் (hypotenuse) ஒரு சாய்தளம் ஆகும். அந்தக் காகிதத் துண்டை ஒரு பென்சிலைச் சுற்றித் தக்கபடி சுற்றினால், அந்தச் செங்கோணத்தின் கர்ணமானது புரிபுரியாகத் திருகைப்போல் பென்சிலைச்சுற்றிப் படிந்து வரும். கர்ணமே சாய்தளம், பென்சிலே நடுத்தண்டு; இவை இரண்டாலும் அமைவதே திருகு.

சாய்தளத்தின் தத்துவத்தைப் பயன்படுத்தும் கருவிகளுக்குக் கணக்கே இல்லை. கம்பி-ஆணி, ஊசி, குண்டூசி, உளி, வெட்டுக்கத்தி, மலைச்சரிவுப் பாதை, திருகு—இவை எல்லாம் சாய்தளத்திலிருந்தே பிறந்தவை. இத்துணை அற்புதமாய்ப் பயன்படும் தாயிலிருந்து பிறந்த சேயாகிய திருகும் பற்பல வகையாகப் பயன்படுகிறது.

கடுக்கன், கம்மல், தோடு, மூக்குப்பொட்டு, கொலுசு, பாதச் சதங்கை முதலிய பற்பல நகைகளைத் திருகின் உதவியாலேயே அணியமுடிகிறது. பெஞ்சு, நாற்காலி, மேஜை, கட்டில், பீரோ முதலிய நூற்றுக்கணக்கான மரச்சாமான்களைத் திருகு இல்லாவிட்டால் நன்றாகச் செய்யமுடியாது. சைக்கிள், மோட்டார்கார், கப்பல், ஏரோப்ளேன் முதலியவைகளை அமைப்பதற்கு எத்தனை திருகுகள் வேண்டியிருக்கின்றன! எத்தனைவிதமான திருகுகள் வேண்டியிருக்கின்றன! ஆழமான குழாய்க்கிணறுகளைத் தோண்டவும், எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டவும், பொன் வைரம் முதலியவைகளை உடைய பாறைகளைக்குடைந்து பெயர்த்தெடுக்கவும் திருகுத் துரப்பணம் (screw-drill) பயன்படுகிறது. படம் பிடிக்கும் காமிராவையும், டெலிஸ்கோப்பு, மைக்கிரஸ்கோப்பு, முதலிய விஞ்ஞானக்கருவிகளையும் சீராகப் பயன்படுத்துவதற்குத் திருகு பயன்படுவதைப் பார்த்திருப்பீர்கள். மோட்டார்காருக்கு டையர் மாற்ற வேண்டியிருந்தால், அதைத் தூக்க 'ஜாக்கு' (jack) என்னும் திருகு-கருவி வேண்டியிருக்கிறது. கப்பலையும், ஏரோப்ளேனையும் அதுவே ஓட்டுகிறது. நீங்கள் நினைத்துப் பார்த்தால் உங்களுக்கு இன்னும் எத்தனையோ உபயோகங்கள் தெரியவரும்.

இவற்றுள் ஒன்றைச் சற்றே விரிவாகப் பார்ப்போம். திருகு ஏரோப்ளேனை ஓடச்செய்கிறது என்பது எப்படி? அது எந்தத் திருகு?

தச்சன் ஒரு திருகாணியை எடுத்து, அதன் நுனியை ஒரு மரப்பலகையில் வைத்து, திருகாணியின் தலையைத் திருகி முடுக்கு கிறான். அப்போது திருகாணியின் உடல் சுற்றிச் சுழல்கிறது. திருகு சுழலுவதை மரம் தடைசெய்கிறது. ஆனால் திருகின்புரியானது ஒரு சாய்தளம் ஆகையால், அது சற்றே வழுக்கிக்கொண்டு, தடையை ஒதுக்கி, உள்ளே செல்கிறது. ஆகவே, சுழலச் சுழலத் திருகானது மேன்மேலும் மரத்துக்குள் முன் நோக்கிச் செல்கிறது. அந்தத் திருகின் உடலோடாவது அல்லது தலையோடாவது ஏதாவதொரு பொருளை இணைத்திருந்தால், திருகு முன்நோக்கிச் செல்லும் போது, அந்தப்பொருளையும் தன்னோடு இழுத்துக்கொண்டே செல்லும், அல்லவா?

தகரத்தால் செய்த தகட்டு விளையாட்டு ஏரோப்ளேனைப் பறக்கவிட்டு, அதுசுழன்றுகொண்டே உயரப்போவதைப் பார்த்து மகிழ்ந்திருப்பீர்கள்.

இவைகளைப் போன்ற ஒரு நிகழ்ச்சிதான் உண்மை ஏரோப்ளேனிலும் நடக்கிறது. ஏரோப்ளேனின் முன்புறத்தில், அதன் மூக்கின் நுனியில், புரொபெல்லர் (propeller) என்னும் கருவி இருக்கிறது, அல்லவா? மின்சார விசிறியில் இருப்பது போல, இதிலும் சற்றே சாய்ந்த கைகள் இருக்கின்றன. ஏரோப்ளேன் எஞ்சின் வேலைசெய்யும்போது இவை சுழலும். இவை சாய்வாக அமைந்திருப்பதாலும், ஒரு நடுத்தண்டைச் சுற்றிச் சுழல்வதாலும், இவை சுழலும்போது புரொபெல்லர் ஒரு திருகைப்போல் தொழில் புரிகிறது. அது தன்னைச் சூழ உள்ள காற்றைத் துளைக்கிறது. சுழலும் திருகாணியின் புரியை மரக்கட்டை தடைசெய்ததுபோல

சுழலும் புரொபெல்லரைக் காற்றானது தடைசெய்கிறது. தன்னை ஒதுக்கித் தள்ளவொட்டாமல் அழுத்துகிறது. சாய்தளத்தின் தன்மையால் திருகாணி மரத்துக்குள் வழுக்கி முன்னே செல்வது போல, சாய்தளத்தின் தன்மையால் புரொபெல்லரும் அழுத்தும் காற்றுக்குள் வழுக்கிக்கொண்டு முன்னே செல்கிறது. தன்னோடு இணைத்திருக்கும் ஏரோப்ளேனையும் கரகரவென்று கூடவே இழுத்துச் செல்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு வேகமாக அந்தப் புரொபெல்லர் சுழலுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வேகமாக அந்த ஏரோப்ளேனும் பறக்கிறது.

இக்காலத்துக் கப்பல்களும் இவ்வாறுதான் செல்கின்றன. அவைகளிலும் புரொபெல்லர்கள் இருக்கின்றன. ஏரோப்ளேனில் உள்ள புரொபெல்லரைச் சாதாரணமாக அதன் மூக்கில் வைத்திருக்கும், கப்பலில் உள்ள புரொபெல்லர் சாதாரணமாக அதன் வால்-புறத்தில் இருக்கும். அது சூழ உள்ள தண்ணீரை அழுத்தித் திருகித் தள்ளிக்கொண்டு, சாய்தளத்தின் தன்மையால் வழுக்கி முன்னேறுகிறது. மரத்தில் பதிந்த திருகாணியை மறுபுறமாகத் திருப்பினால் அது கழன்று பின்னோக்கி வருவதுபோல, கப்பலின் புரொபெல்லரும் அதைப் பின்னோக்கிச் செலுத்தவும் உதவுகிறது. ஆனால் ஏரோப்ளேனில் இது முடியாது.

இத்தனை உபயோகங்களை உடைய திருகின் தத்துவத்தை முதன் முதலாக அறிந்து, நமக்கு அளித்தவரும் அதைப் படிப்படியாகப் பற்பல துறைகளில் பயன்படுத்தியவரும் நமது நன்றிக்கு உரியவர்கள். அவர்கள் அனைவரையும் நாம் எல்லோரும் என்றென்றும் பாராட்டுவோமாக.

# *கலிங்கத்துப் பரணியில் நகைச்சுவை

பேராசிரியர், திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள்,
திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம்.

பேய் என்றால் எல்லாரும் பயப்படுவார்கள். அப்பேய்களைக் குடும்பம்குடும்பமாக வரவழைத்து அவைகளைக் கேலிசெய்வதற்கு எவ்வளவு மனத்திட்பம் வேண்டும், பாருங்கள். அத்தகைய மனத்திட்பம் படைத்தவர் செயங்கொண்டார் என்ற புலவர். இவர் வாழ்ந்தகாலம் பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதி; சுமார் 850 ஆண்டுகளுக்குமுன், முதற் குலோத்துங்கசோழனது ஆஸ்தான கவிஞராக விளங்கினார். தமது புலமைச் சிறப்பினால் கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டமும் பெற்றார்.

இவரது பெரும்புலமைக்கு அறிகுறியாக இன்று விளங்குவது கலிங்கத்துப்பரணியென்ற ஒருநூலேயாம். பரணியென்பது 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. சிலப்பதிகாரம் முதலிய பஞ்ச காவியங்கள் தோன்றிய காலத்தின் இறுதியில், பிற்காலச் சோழவம்சமும் அரசுபுரியத் தொடங்கிற்று என்னலாம். இக் காலத்துக்குச் சுமார் 200 ஆண்டுகட்கு முன்னர், பிரபந்தங்கள் தோன்றலாயின என்றும் நாம் கருதலாம். இவற்றுள் முற்படத் தோன்றியவை பெரும்பாலும் தெய்வங்களைப் பற்றியனவாகவே இருந்தன. சம்பந்தரது திருவெழுகூற்றிருக்கை திருமங்கை மன்னரது பெரிய திருமடல், சிறிய திருமடல் முதலியன உதாரணங்களாம். பிரபந்த வகைகளும் வரவர மிகுதியாய் அபிவிருத்தி யடைந்தன. இப் பிரபந்தங்களை உட்படுத்திப் பாட்டியல் நூல்கள் தோன்றத் தொடங்கின. வெண்பாப் பாட்டியலில் ஐம்பத்தாறு வகைப் பிரபந்தங்களும், பன்னிருபாட்டியலில் அறுபத்தைந்து பிரபந்தங்களும், பிரபந்த மரபியலில் அறுபத்தாறு பிரபந்தங்களும் காணப்படுகின்றன.

---

* இதன் சுருக்கம் 20—7—53-ல் திருவனந்தபுரம் ரேடியோ நிலயத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது.

இவற்றில் ஒரு சில, தெய்வங்களைப் பற்றியன என்றேன். சில, அரசர் முதலியோரைப் பற்றியன. இன்னுஞ் சில, பள்ளர், குறவர் முதலியோரது சமுதாய வாழ்க்கையைப் பின் பற்றியன. ஆனால், இவ்வகையிலும் திருமால், சிவன் முதலிய தெய்வங்களின் சிறப்புக்களும் இடையிடையே காணப்படும். அரசர்களைப் பற்றிய பிரபந்தங்களில், அவர்களது ஆட்சித்திறம், கொடை முதலிய சிறப்பியல்கள் பல படப் பாராட்டப் பெற்றிருக்கும். வீரஞ் சார்ந்த போர் வெற்றியும் அரசர்களுக்கே உரியன. இவ்வகை வெற்றியைப்பற்றிக்கூறும் பிரபந்த மொன்றற்குப் பரணி யென்று பெயர். அரசர்களுக்கே உரிய இப்பிரபந்த வகையைப் பிற்காலத்தார் தெய்வங்கட்கும் உரியவாக்கி, புராணங்களிற் காணும் அவர்களது வெற்றி குறித்தும் பாடி வந்துள்ளனர். தக்கயாகப் பரணி, இரணிய வதைப் பரணி முதலியன உதாரணங்களாம். இவ்வாக்கத்தோடு அமையாது, தத்துவப் பொருள்களை யெடுத்துக் கொண்டு, அவை தம்மில் போர் நிகழ்ந்ததாகக் கற்பித்து, அதன்கண் நேரிடும் வெற்றியையும் குறித்து மிகப்பிற்பட்ட காலத்தார் பரணிப் பிரபந்தம் இயற்றி யுள்ளார். உதாரணமாக, தத்துவராய சுவாமிகள் இயற்றிய அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி முதலியவற்றைக் கூறலாம். எல்லாப் பரணிகளிலும் கலிங்கத்துப் பரணியே மிக்க சிறப்பு வாய்ந்தது. இதற்கு

பரணிக்கோர் செயங்கொண்டான்

என்ற செய்யுட் பகுதி சான்று.

பரணி போர்க்களத்தில் யானைப்படையை அழித்து வென்ற ஓர் அரசனது வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்து பாடுவது. பிரபந்த வகைகளை விவரித்துக் கூறும் பாட்டியல் நூல்களில் முதன்முதலில் தோன்றியது வெண்பாப் பாட்டியல். இது இத்தனை யானையைப் பாணித் தலைவன் அழிக்க வேண்டுமென்று குறிக்கவில்லை. பின் தோன்றிய பன்னிருபாட்டியல் 900 யானைகளை அவன் கொன்றிருக்க வேண்டுமெனத் திட்டப்படுத்தியது. சுமார் 300 ஆண்டுகளுக்குமுன் தோன்றிய இலக்கண விளக்கப்பாட்டியல் அவன் கொன்றழித்த யானைகள் 1000 ஆதல் வேண்டுமெனக் கணக்கிட்டுள்ளது.

பரணியைப் பாடுமுறை அறிதற்குரியது. மூதிற் பெண்டிர் பலர் பரணி நாளன்று நாட்காலையில் நீராடி உலர்ந்த வஸ்திரமணிந்து தம்மை அலங்கரித்துக்கொண்டு, வீடுதோறுஞ் சென்று ஆங்காங்குள்ள மகளிரைத் துயிலுணர்த்தி, தாம் காளிகோயிலின் முற்றத்திலே ஆவேசமுற்று, குரவைக் கூத்தாடிப் பாடும் பரணிப்பாட்டைக் கேட்டு மகிழுமாறு வாயிலைத் திறந்து வரும்படி அழைப்பர். அவர்கள் முன்னிலையில் பாடியாடுவதாகப் பரணிப் பிரபந்தத்தை இயற்றுதல் மரபு. இங்ஙனம் பாடியாடுதல் உண்டென்பது பரணிகளில் வரும் வள்ளைப் பாட்டுக்களாலும் (கலிங்க. 514-531.) அறிந்து கொள்ளலாம். இம்மரபினை

காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை
புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து
துணங்கையர் குரவையர் அணங்கெழுந் தாடிப்
பெருநில மன்னன் இருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி

(சிலப். 5, 67-73)

எனச் சிலப்பதிகாரமும்

புறகடஞ் சேர்குர வைப்பொருள் மேலிங் கிருவர் மன்னர்
திறனுளும் யானைப் படைசெற்று வென்ற வொருவன் செய்கை
நெறிபடு நேரடி யேமுதல் நீண்டன ஈரடியாய்ப்
பெறுவன தாழிசை யாற்பர ணிப்பெயர் பேசுவரே

என நவநீதப் பாட்டியலும் உணர்த்தும். இதனாலேயே கடைதிறப்பு இவ்வகைப் பிரபந்தங்களில் முற்பட வைக்கப்பட்டுள்ளது. இறுதியில் பாணிக்கூழ் அட்டு உண்டு மகிழ்தல் வழக்கம். நச்சினார்க்கினியரும் (தொல் செய். 149) 'பரணியாவது காடுகெழு செல்விக்குப் பரணிநாட் கூழுந் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப் பற்றியது. அது பாட்டுடைத் தலைவனைப் பெய்து கூறவிற் புறத்திணை பலவும் விராயிற்று' என்றெழுதியமையும் அறியத் தக்கது. பாணிக்கூழ் அடுதல் மரபு என்பது

இடைக்கப் பொருது மணலூரில் இழ்நா ளட்ட பரணிக் கூழ்
படைத்துப் பயின்ற மடைப் பேய்கள் பந்தி தோறும் வாரீரே,

என்ற பரணிச் செய்யுளாலும் விளங்கும்.

போர்க்கள வெற்றியைக் குறித்துவரும் பிரபந்தங்கள் மூன்றாகும். அவை செருக்களவஞ்சி, களவழி, பரணி என்பன. செருக்களவஞ்சியில் மனிதருடலையும் யானை முதலியவற்றினுடலையும், பேய், கழுகு முதலியவும் தின்று களித்து ஆரவாரஞ் செய்ய, பூதமும் பேயும் பாடியாடும் போர்க்களத்தைப் பாடுவது. களவழியில் வதையுண்ட வீரர்களின் உடலுறுப்புக்களும் யானை முதலியவற்றின் உடலுறுப்புக்களும் சிதறுண்டு கிடக்குந் தோற்றத்தை உவமமுதலியவற்றால் வர்ணித்துப் பாடுவது. இரண்டும் சரிதநயமற்ற சிறுபிரபந்த வகைகள். பொருணயமும் சிறந்து விளங்குதற்கு இவற்றில் இடமில்லை. கவிஞனது கவித்துவச்சிறப்பு முழுதும் நன்குவெளியாதற்கு இவை இடந்தரமாட்டா. ஆனால் பரணி அங்ஙனமன்று. சரிதநயம் பொருணயமுதலியவை நன்கு தோன்ற இயற்றப்படுவது. கவித்துவத்திறம் முழுமையும் விளங்குதற்கு இடந்தருவது. எனவே பிரபந்தவகைகளில் முன்னையிரண்டினும் இப்பரணி சிறந்ததாகும்.

என்ன வகையான சரிதநயம் என்று நாம் அறிதல்வேண்டும். முதலாவது பாட்டுடைத் தலைவனைப்பற்றியது. முதற்குலோத்துங்கன் சோழஅரசர்களுள் பெரும்புகழ்பெற்றவன். சக்கரக்கோட்ட முதலிய வடநாட்டுப் பிரதேசங்களையும் பாண்டிநாடு, சேரநாடு என்ற தென்தேசங்களையும் வென்று தன் அடிக்கீழ்ப்படுத்தினன். மனுநீதிவழுவாது காத்தான். வரையாது கொடுக்கும் வள்ளன்மையில் மேம்பட்டவன். கவிதை முதலிய கலைகளையும் கவிஞர்களையும் போற்றிவந்தான்.

பரிசில் சுமந்தனர் கவிஞர்; பகடு சுமந்தன திறைகள்;
அரசர் சுமந்தனர் கழல்கள்; அவனி சுமந்தன புயமும்.

தனக்குப் பகைவரும் போரும் இல்லாமையினாலே

வருசெருவொன் றின்மையால் மற்போரும் சொற்போரும்
வாதப் போரும்
இருசிறைவா ரணப்போரும் இகல்மதவா ரணப்போரும்
இனைய கண்டே

கலையினொடுங் கவிவாணர் கவியினொடும் இசையினொடும்
காதல் மாதர்
முலையினொடு மனுநீதி முறையினொடு மறையினொடும்
பொழுது போக்கி

வாழ்ந்து வந்தான். ஒருநாள் பாலாற்றின் கரையிலே பரிவேட்டையின் பொருட்டு வடக்கே செல்லக்கருதினன். யானைமீது ஆரோகணித்து, அரசியர் மருங்குவர மந்திரிதந்திரிகள் புடைசூழ, நால்வகைப்படைகளும் உடன்வரச் செல்லலாயினன். வழியில், தில்லைநகர், திருவதிகை முதலிய ஸ்தலங்களில் தங்கிப் பின்பு கச்சிமாநகரையடைந்தனன். இந்நகரிலே தென்மேற்கிலுள்ள சித்திரமண்டபத்திலே

மண்ட லீகரும் மாநில வேந்தரும்
வந்து ணங்கு கடைத்தலை வண்டைமன்
தொண்டை மான்முதல் மந்திர பாரகர்
சூழ்ந்து தன்கழல் சூடி யிருக்கவே

கொலுவீற்றிருந்தனன். அப்பொழுது திருமந்திர வோலையாள் அரசனை வணங்கி, திறைசெலுத்திக் காட்சிபெறுதற்குப் பலமன்னர்களும் திருவாயிலில் காத்திருக்கின்றனர் எனத் தெரிவித்தனன். திறைப்பொருள்களையெல்லாம் அரசன் கண்டருளி, திறை செலுத்தாதார் யாரேனும் உளரோ என்று கேட்க, வடகலிங்கத்துமன்னன் இருமுறையாகத் திறைசெலுத்தவில்லையென்று அறிந்தான். அரசன் பெருங்கோபங்கொண்டு விரைவிற் படையெடுத்துச்சென்று அவனுடைய கோட்டைகளையெல்லாம் அழித்து, அவனையும் சிறைபிடித்துவாருங்கள் என்று பணித்தனன். உடனே வண்டைமன்னனாகிய கருணாகரத் தொண்டைமான்

தான்சென்று பொருது பகைவை அழித்து மீளுதற்கு உத்தரவு வேண்ட, அவனுக்கு விடையளிக்கப்பட்டது. அவ்வாறே இளவரசாகிய விக்கிரமசோழனுடனும் வாணகோவரையன், முடிகொண்டசோழ மூவேந்தவேள் என்ற இரண்டு உபசேனுபதிகளுடனும் படையெடுத்துச் சென்றனன். பாலாறு (இது முற்காலத்தே காஞ்சிநகர்க்கு வடக்காக ஓடிக்கொண்டிருந்தது) பொன்முகரி, கொல்லியாறு, பெண்ணையாறு, கோதாவரி, பம்பாநதி, கோதமை முதலியவற்றையெல்லாம் கடந்துசென்று, பெரியதொருகடல்போல் சோழ சைனியம் பரந்துசென்று கலிங்கதேசத்தை அடைந்தது. கலிங்க அரசனுகிய அனந்தபன்மன், மந்திரியர் தடுக்கவும் பொருட்படுத்தாது, போருக்கு எதிரூன்றி நின்றனன். இருசேனைகளுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. கலிங்கசேனை முற்றும் அழிவுற்றது. பிறகிட்டு ஓடி ஒருகுன்றில் ஒளித்திருந்த அனந்தபன்மனைச் சிறைபிடித்ததாகத் தெரியவில்லை. ஆனுல் கலிங்கநாட்டை அழித்து ஜயஸ்தம்பம் நாட்டி யானை குதிரைகளுடனும் நவநிதிக்குவையுடனும் மகளிருடனும் கருணுகரன் மீண்டுவந்து தன் அரசனுகிய அபயனது அடியைத் தலைமிசைச் சூடினன். இப்போர்க்களம்

> தேவாசுர ராமாயண மாபாரத முளவென்று
> ஓவாவுரை ஓயும்படி உளதப்பொரு களமே

என்று கூறப்படுகிறது.

முதற் குலோத்துங்கனது கலிங்கப்போர் வரலாறு இங்ஙனமுள்ளது. இவன் எத்தகைய அரசர் பரம்பரையில் தோன்றியவன்? இச்சரிதத்தை இராசபாரம்பரியம் என்னும் பகுதியிற் காணலாம். அக்காலத்து வழக்கத்தை அனுசரித்து, திருமால் முதல் குலோத்துங்கன் ஈறுகவுள்ள பரம்பரை கொடுக்கப்பட்டுளது. இங்ஙனம் குலமுறைப் பெருமையைச் சொற்சிரடியாற் கிளத்துதல் 'மெய்க்கிர்த்தி' எனப்படும். அபயன் முன்னோர்களில் பௌராணிக புருஷர்களாகிய மனு, இக்குவாகு, மாந்தாதா, முசுகுந்தன், சிபி, சுராதிராசன் முதலியோர் காணப்படுகின்றனர். மனு பசுவின் பொருட்டு மகனை முறை செய்தவன் எனக் குறிக்கப்படுகிறான். சுராதிராசன் சோழமண்டலம் அமைத்தவன். இவனுக்குப்பின்

சரித்திரபுருஷர்கள் கூறப்படுகிறார்கள். இவர்கள் முறையே இராஜகேசரி, பரகேசரி யென்ற பெயர்களை மாறிமாறிச் சூட்டிக்கொண்டு அரசாண்டு வந்தனர்.

இராச கேசரி புரந்து பரகேசரி களாம்
இருவ ராணைபுலி யாணையென நின்ற புகழும்

என்பது பரணிச்செய்யுள். இச்சரித்திர புருஷர்களுக்கு முன், கற்பித புருஷர்கள் ஒரு சிலர் கூறப்படுகின்றனர். காலனோடு வழக்குரைத்த கிள்ளிவளவன், காவிரிநீர் கொணர்ந்த சித்திரதன்வன், நமனைவென்ற சூரகுரு, இந்திரனையே புலியாகத் தன் கொடியிற் கொண்ட வியாக்கிரகேது, வாதராசனைப் பணிகொண்டவன், தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன், பாரதப்போரில் பாண்டியர் படைக்கு உணவளித்தவன், பிலத்துவாரத்தின் வழியாகச்சென்று நாககன்னியை மணந்தவன் முதலியோர் இவ்வகையினர். இவர்களுக்குப் பின்னர், களவழிக் கவிதை கேட்டுச் சேரனைச் சிறைவீடுசெய்த சோழன் செங்கணான், 'முகரி' யைப் படத்தெழுதி அவன் கண்ணை அழித்த கரிகாலன், பட்டினப்பாலைகொண்டவன், ஈழமுங்கூடலும் வென்ற முதற்பராந்தகன், சேரநாட்டில் சதயநாள் விழாவைத்த முதல் இராசராசன், கங்கையும் கடாரமுங் கொண்ட முதல் இராசேந்திரன், கம்பிலிச் சயத்தம்பம் நாட்டிய இராசாதித்தன், கொப்பப் போர் வென்ற இரண்டாம் இராசேந்திரன், மனுநெறிபுதுக்கிய இராசமகேந்திரன் என்ற அரசர்கள் அரசுபுரிந்தனர். அபயனாகிய முதற்குலோத்துங்கன் குந்தளரைக் கூடற்சங்கமத்து வென்ற வரலாறுமுடிய நாம் இங்கே அறிகின்றோம். பாண்டியனையும் சேரனையும் இவன் வென்று அடிப்படுத்தியது பிறிதோரிடத்துக் கூறப்படுகின்றது.

இம் முதற் குலோத்துங்கனது கலிங்கவெற்றியைப் பற்றியதே கலிங்கத்துப்பரணி. 'பரணியாவது காடுகெழுசெல்விக்கு (அதாவது காளிதேவிக்கு) பரணிநாட் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப் பற்றியது. அது பாட்டுடைத் தலைவனைப்

பெய்து கூறலிற் புறத்திணை பலவும் விராயிற்று' என்று நச்சினார்க்கினியர் விளக்கியமை மேலே குறிக்கப்பட்டது. காளிதேவி பகைவரைப் புறங்காட்டியோடச் செய்வள் என்றும், வஞ்சிசூடி வேந்தன் படையெடுத்துச் செல்லும்போது, இத்தேவியும் பூதகணங்களோடு அவன் முன்னர் எழுந்தருளுவள் என்றும் பூதங்களும் நெற்பொரி, அவரை, துவரை, மாமிசம், குடர், உதிரம் முதலிய நிரம்பிய அகன்ற பாத்திரங்களைக் கையிலேந்திச் செல்லும் என்றும் வெண்பாமாலையால் அறிகின்றோம்.

நீடோளான் வென்றி கொள்கென நிறைமண்டை வலனுயரிக்
கூடாரைப் புறங்காணும் கொற்றவைநிலை யுரைத்தன்று

என்ற 40-ம் கொளுவும்

ஆளி மணிக்கொடிப் பைங்கிளி யாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை—மீளி
அரண்முருக்க ஆகோள் கருதின் அடையார்
முரண்முருக்கத் தான்முந் துறும்.

அணங்குடை கோலை பொரிபுழுக்கல் பிண்டி
நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்துக்—கணம்புகலக்
கையிரிய மண்டைக் கணமோடி காவலற்கு
மொய்யிரியத் தான்முந் துறும்.

என்ற வெண்பாக்களும் இங்கே அறியத்தக்கன.

போர்த் தொடக்கத்தின்முன்னர் நிகழ்த்தும் களப்பலியூட்டுதலும் காளிதேவிக்கே என்பது மரபு.

மெய்வரு காளிமுன்னர் மெய்யுறுப் பனைத்தும் வீரன்
கொய்வரு நிலையிற் கொய்து கொடுத்தனன் என்பமன்றோ

என்றார் வில்லிபுத்தூரார். பாரத வெண்பாவிலும் (453)

தொல்லரச ரீண்டப்போய்ச் சோரிப் புனல்சிந்தி
எல்லையில்சீர் மாகாளிக் கேய்தொழிலார்

எனக் கூறுகின்றது. இதன் உரைப் பகுதியில்

வீரஸ்திரீக்குத் துரியோதனனையும்......பலியாக உதகம் பண்ணி, அலகைக்கும் பக்ஷிசாதிகளுக்கும் சுரோணிதமும் மாங்கிசமும் தானம் பண்ணி என வருகின்றது. இது "கொற்றவை" நிலை என்று கூறப்படும். காளிதேவியைத்தான் நம் நூல்கள் காடுகிழவோள், கொற்றவை, துர்க்கையெனப் பலபெயர்களால் உணர்த்துகின்றன. பரணி யானை பிறந்த நாள்; அதனால் வேந்தன் மத்தகஜம் போல் பகைவனை மதியாது படையெடுத்துச் செல்லுவான். (சீவக சிந். 1813, உரை). யமனை அதிதேவதையாக உடையநாள்; அதனால் பகைவனுக்கு நாசம் விளைவது உறுதி. காளிதேவிக்கு உகந்த நாள்; இக்காரணத்தால் இந்நாளுக்கு 'காடுகிழவோள்' என அவளது பெயரையே இட்டு வழங்குவர்.

காடு கிழவோள் பூதம் அடுப்பே
தாழி பெருஞ்சோறு தருமனுள் போதமெனப்
பாகு பட்டது பரணிநாட் பெயரே

என்று திவாகரம் கூறிற்று. (தருமன்-யமன். போதம்-யானை.) எனவே காளியையும் அவளது பேய்க்கணங்களையும் தமது பரணியின் கட்டுக்கோப்பிலேயே செயங்கொண்டார் அமைத்து விட்டனர்.

காட்டிலே அமைக்கப்பெற்ற புதுக் கோயிலிலே பேய்கள் சூழக் காளிதேவி கொலுவிற்றிருக்கின்றாள். காடு அபயனது கோபக்கனலால் வெள்ளாறும் கோட்டாறும் புகையால் மூடவெந்த வனத்தை நினைப்பூட்டுகிறது. அவளது கோயிலின் கருவில் போரில் உயிரிழந்த அரசருடைய பட்ட மகிஷிகளின் ஆபரணத்திலுள்ள மணிகளே இடம் பெற்றன. பகைவீரர்களது நிணத்தை உதிரம் விட்டுக் குழைத்து அவர்கள் கருந்தலைகளைச் செங்கல்லாக அடுக்கியதே சுவர். இங்ஙனமே கோயிலின் தூண், உத்திரம், மட்டப்பா, நாசிகை, கவிப்பு, கோபுரம், நெடுமதில், மகரதோரணம், மாலை முதலிய பலவகைத் தூக்குகள், விளக்குகள் முதலிய எல்லாம் அபயனது வெற்றியின் பெருமையையும் எதிர்த்த சேனைத்தொகுதியின் அழிவுபாட்டின் பெருமையையும்

போர்களின் கடுமையையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. அவ்வளது கோயிலின் முன்பாக வீரர்கள் தம் உறுப்புக்களை அரிந்து பலி கொடுத்துள்ளனர். தேவியின் அவயவங்கள் அடிமுதல் முடிகாறும் அமானுஷ்யத் தோற்றம் விளங்க, இடையிடையே அபயன் பெருஞ் சிறப்புக்கள் விளங்க வர்ணிக்கப்படுகின்றன. இவளது நடனத்தைப் பற்றி

தரணி பரித்ததெனப் பரணி தரித்தபுகழ்ச்
சயதரனைப் பரவிச் சதிகொள் நடத்தினளே. (109)

என்றது இங்கே குறிக்கத்தக்கது. அவளது திருமேனியின் பெருமை

அண்டமுறுங் குலகிரிகள் அவளொருகால் இருகாதிற்
கொண்டணியும் குதம்பையுமாம் கோத்தணியின் மணிவடமாம் (119)

என்றதனால் விளங்கும்.

தேவியை அகலாது சூழ்ந்திருந்த பேய்கள் கவிஞனது பேராற்றலால் நமது கண்முன்னே தோன்றிவிடுகின்றன. கன்னங்கரேரென்று நெடியவாயுள்ள பனைகள் காலுங்கையுமுடைய போலிருந்தன அப்பேய்கள். அவற்றின்வாய்கள் பெரிய பிலத்துவாரங்களோடு எது மிக அகலம், எது மிக ஆழம் என்று வாதுசெய்யுமாம். அவை உட்கார்ந்திருந்தால் அவற்றின் முழந்தாள்கள், முகங்களுக்கு மேலே மூன்றுமுழம் உயர்ந்திருக்குமாம். அவற்றின் மூக்கிலேயுள்ள முடமயிர்கள் பெரும் பாம்புகள் தொங்கிக் கிடப்பன போன்றிருக்குமாம். செவிகளிலே ஆந்தைகள் உள்ளொதுங்கியிருக்க, வௌவால்கள் அங்குமிங்கும் உலாவிப் பறக்குமாம். பற்கள் கொட்டும் ஏர்க்காலும் கோத்தமைத்தனபோன்றிருக்குமாம். அவற்றின் தலைகள் வானத்தைத் தாக்கித் தகர்க்குமாம்; உதடுகள் அவற்றின் மார்புவரை தாழ்ந்து தட்டுமாம். நெடிய மூங்கில்களைக்கண்டால், குழந்தைப் பேய்கள் 'அம்மா, அம்மா' என்று கூத்தடிக்குமாம். ஒட்டகங்களைக் கண்டால் தாய்ப்பேய்கள் 'என்பிள்ளையல்லவா' என்று ஒக்கலில் வைத்துக் கொள்ளுமாம். இப்படிப்பட்ட பேய்களில் ஒரு சிலவற்றிற்குப் பசிக் கொடுங்கனலால் வயிறு தீய்ந்து முதுகுந் தீய்ந்துவிட்டது; ஒரு சிலவற்றிற்குக் கால் முடமாகிவிட்டது. முன்னொருமுறை அபயன்புரிந்த

போரில் பகையரசனது தலையினின்றும் சிதறிய மூளைச் சேற்றிலே வழுக்கிவிழுந்து மொழி பெயர்ந்து இவ்வாறாயிற்று. மூளைச்சோற்றிற்கு அத்தனை அவா! சிலவற்றிற்குக் கைசொத்தையாய்ப் போய்விட்டது; முன்பொருகாற் களத்திற்கூழடுதற்கு ஆய்ந்தெடுத்த வெண்பல் அரிசியை உரலிலேயிட்டு யானையின் நீண்ட கொம்பாகிய உலக்கைகொண்டு குற்ற, அவ்வுலக்கைபட்டு வலக்கை இவ்வாறாயிற்று; சோறுக்கப் பொறுக்கவில்லை. சிலவற்றிற்குக் குருதியும் குடருங் கலந்தட்ட சூடான கூழ் தெறித்து ஒருகண் குருடாயிற்று. காய்ச்சியன கூழ் மிக்கசூடுள்ளதாயிருக்க அதன்றுசியால் அதனைக்குடித்து, நாச் சுருண்டு உள்விழுந்து முழு ஊமைகளாய் விட்டன சிலபேய்கள். அபயனது குழந்தைப் பருவத்தில் அவன்நிகழ்த்திய பெரும்போர்த் திறத்தினைக்கண்டு சேனைவீரர்கள் செய்த போராவாரத்தால் சிலபேய் செவிடாய்ப் போய்விட்டன. அரசன் கடாரத்தை அழித்தபொழுது பெருகிய குருதிப்போற்றிலே ஆடிநீந்திய சில பேய்களுக்குக் குராக்குவாதம் பிடித்து, அவை கூன்முதுகாயின.

அச்சமும் புதுமையும் நகைச்சுவையும் ஒருங்கே விளைக்கும் இத்தகைய பேய்கள் தன்னை அகலாது சேவிக்க, தேவி கொலுவிருந்தனள். அப்பொழுது குடர்மாலையும் நிணச்சட்டையுமிட்டு ஒரு பேய் அவள் திருமுன்பு வந்து வணங்கி நின்றது. இதுதான் கோயில் நாயக நெடும்பேய். இப் பேய் 'தாயே, முன்பு ஒருமுறை சுரகுரு என்ற சோழர் பெருமான் தூதாக யமனிடத்திலே செல்லவிட்ட ஒரு வீரன் செல்லுமுன்பு உமக்குப் பலிக்கொடையாகத் தனது தலையை அரிந்து வைத்தனன். அத்தலையை ஊனசையாற்றுத ஒருபேய் தின்றுவிட்டது. இதனைக் கண்டு அப்பேயின் தலையை அரிந்துவிட நீர் ஆணையிட்டீர். அப்பேய்க்கு உறவாயிருந்த சில பேய்கள் உமது கோபத்திற்கு அஞ்சி ஒளித்தோடிப்போயின. இது தேவியின் திருவுள்ளம் அறிந்ததே. அப்பேய்களில் ஒரு முதுபேய் இங்கு வந்துள்ளது, தேவியிடம் விண்ணப்பஞ்செய்தற்கு; இப் பேய் வேறொரு குற்றமும் செய்ததில்லை; தாயின் திருவுள்ளம் எப்படியோ? என்று பணிந்து கேட்க, தேவியும் 'அம் முதுபேயை அழைத்து வருக' என்று கட்டளையிட்டனள். அப்

பொழுது முதுபேய் அஞ்சி அஞ்சி வந்து, 'என் குற்றத்தை மன்னித்து அருள் செய்ய வேண்டும்' என அடி வீழ்ந்திறைஞ்சி வணங்கிற்று. தேவியும் 'ஊனசையாற் பிழை செய்த அப்பேயின் தலையை அறுத்து, எமது பக்தனாகிய வீரனது சரீரத்திற் பொருத்தி அவனுக்கு உயிர் கொடுத்ததோடு எமது கோபமும் தணிந்தது; பிழையும் பொறுத்தனம்' என்று அருளிச் செய்தனள். பின்பு, முதுபேய் ஆயிரம் இந்திர ஜால வித்தைகள் கற்று வந்துள்ளேன். அவற்றைத் தேவி கண்டருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்து, ஆணைபெற்று, அவ் வித்தைகளைக் காட்டிற்று. அவை பேய்கள் உகந்து காணக்கூடியவையாயிருந்தன. அபயன் முற்காலத்தே போர்க்களங்களில் கொன்றழித்த நால்வகைச் சேனைகளின் குறைத்தலைப் பிணங்களும், அற்ற தோள்களும், குடர்களும், தாள்களும், இழுக்கு மூளைகளும், நிணங்களும், பிணமலைகளும், உதிரவாறுகளும், பேய்களின் கொக்கரிப்பும் எல்லாம் அவற்றின் கண்முன் தோன்றின. 'பிணங்களைத் தின்றுகொண்டிருந்த பேய்களில் நம்முடைய கூட்டத்தைச் சாராத சில பேய்களையும் இங்கே பார்' என்று முதுபேய் காட்டியதும், கண்டுகொண்டிருந்த பேய்களுக்குப் பொறுக்கமுடியவில்லை. தாம் காண்பது இந்திரஜாலவித்தை என்பதையும் மறந்து, ஒன்றின்மேல் ஒன்று விழுந்தடித்துக்கொண்டு பசிப்பிணியைத் தணிக்கத் தொடங்கின. ஆனால் வெற்று நிலமும், வெற்று விசும்பும்; வெறுங் கையும் தான் கண்டபலன்.

விழுந்து கொழுங்குரு திப்புன லென்று
வெறுங்கை முகந்து முகந்து
எழுந்து விழுந்தசை யென்று நிலத்தை
இருந்து துழா விடுமே.

இவ்வெற்று முயற்சிகளுக் கிடையே ஒரு சத்தம் கேட்டது. அது யோகினி மாதர்களின் சிரிப்பொலி. அவர்களுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. முறம்போலுள்ள தம் நகங்கள் முறிந்துபோம்படி அவர்கள் கொட்டிக்கொட்டிச் சிரித்தார்கள். சிரித்துச் சிரித்து அவர்களது முகம் கோணிப்போய்விட்டது: அவர்கள் முதுகு திறம்பிவிட்டது.

அவர்களது விலாப்புறம் இற்றுப் போயிற்று. சிரிப்பொலி கேட்டதும், பேய்களுக்குப் புத்தி தெளிந்தது. ஒருவனைச் சீர்திருத்தி அறிவு தெளியும்படி செய்வதற்குப் பிறரது நகைப்பைக் காட்டிலும் சிறந்த கருவி வேறில்லையல்லவா? அதுபோல் பேய்க்கணங்களெல்லாம் தேவியை வணங்கி 'இந்திரசால வித்தை போதும், நிறுத்த அருள்புரிய வேண்டும். இல்லாமற் போனால், நமது பிரஜைகளாகிய பேய்களெல்லாம் மாண்டு போவது உறுதி' என்று முறையிட்டன. ஆனால் முதுபேய் 'நான் கற்ற வித்தைகளையெல்லாம் கடைசிவரை கண்டருள வேண்டுமென்று முறையிட்டது. மக்களினத்திலும் ஏதேனும் வித்தை வல்லவர் இவ்வாறு வற்புறுத்துதல் சாதாரண நிகழ்ச்சியல்லவா! இம் முறையீட்டைக் கேட்ட பேய்க்கணங்கள் முதுபேயை நோக்கி 'மாயப் பாவி, இன்னும் எங்களைத் துன்புறுத்துதற்குத் துணிந்தாயா? தாயின்பேரில் ஆணையிட்டிருக்கிறோம், நிறுத்து' என்று கூக்குரலிட்டன. முதுபேயும் இந்திரஜால வித்தையை நிறுத்தி 'உமது கோபத்திற்கும் சுக்குருவின் கோபத்திற்கும் அஞ்சி நான் இமகிரியிலிருந்தேன். அங்கே நான் சாதனமந்திரவித்தைகள் பலவுங்கற்றுள்ளேன். அவைகளைக் காண்' என்று காட்டிற்று. பின்னர் 'உமது பழ அடியார் அடியாளாகிய உருத்திர யோகினி, என்னை இன்னும் இமகிரியில் தங்கியிருக்கும்படி செய்து அபயனது இராச பாரம்பரியத்தை உணர்த்திற்று. அதனைக் கேளும்' என்று கூறி விவரித்தது. தேவி, சோழவம்சத்தை விவரித்த பரிசு மிக அழகாக உள்ளதென்று வியந்து, 'பேய்களே, நீங்களெல்லாம் அவ்வம்ச பாரம்பரையைக் கற்றய்ம்மின்' என்று திருவாய் மலர்ந்தனள்.

பசித்தவன் காதிலே பஞ்சாட்சரம் ஜெபி யென்றால் முடியுமா? பேய்களுக்குத் தங்கள் பசிக்கொடுமை தீர்க்கும் வழியைப்பற்றித்தான் சிந்தை சென்றுகொண்டிருந்தது. அக்கொடுந் தீயால்

> வேகைக்கு விறகானோம்; மெலியா நின்றோம்;
> மெலிந்த வுடல் தடிப்பதற்கு விரகும் காணோம்;
>
> சாகைக் கித் தனையாசை போதும்; பாழிற்
> சாக்காடும் அரிதாகத் தந்து வைத்தாய்

என்று பலவாறாக முறையிட்டன. அபயன் போர்கள் நின்றுவிட்டன; நாங்களும் உணவின்றி செற்றுய்ப் போய்விட்டோம் என்று முடிவிற் கூறின. அப்பொழுது இமயகிரியினின்றும் வந்த முதுபேய் தான் வரும் வழியிற் கலிங்கநாட்டில் நிகழ்ந்த துர்நிமித்தங்களைத் தெரிவித்தது. இந்நிமித்தங்களின் விளைவைக் கணிதப்பேய் உணர்த்த அறிந்து கலிங்கப் போர் நிகழும் என்றும், அதற்குப் பாணிக்கூழ் உண்டென்றும், அதனால் பேய்களின் பசி தீருமென்றும் தேவி கூறியருளினள்.

இதைக் கேட்டதும், பேய்களுக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவற்றின் உடல் பூரித்துத் தடித்தன. நடனமாடின. அடிக்கடி நாவினால் உதட்டை நக்கி நனைத்தன. ஆடி இரைத்து ஆரவாரஞ் செய்தன. ஆனால் ஒரு சிறு சந்தேகம் அவைகளுக்கு உண்டாய்விட்டது. ‘போர்புரிபவனோ தெய்வப் பிறப்பல்ல; ஒரு மனுஷ்யன். அவனை எதிர்ப்பவனோ இதுவரை அவனுக்குக் கப்பம் கட்டிவந்தவன். இப்பகைவனிடம் பெருஞ்சேனையிருப்பதற்கு இடமில்லை. விளைவது பெரும் போராயிருக்க முடியாது. இந்தப்போரில் அழியும் பிணங்கள் எங்கள் பசிப்பிணியைத் தீர்ப்பதற்குப் போதுமா?’ என்று தேவியின் முன்பு கூறின. தேவியும் இக்கலிங்கப்போர் இலங்கைப்போருக்கு ஒட்டிரட்டியாகும் என்றுணர்த்தி, இலங்கைப்போர் நிகழ்த்திய திருமாலே இங்கே அபயனாக அவதரித்திருக்கிறானென்று விளக்கி அபயனது அவதார மகிமையைக் கூறினள். பின்பு அவன் வெற்றிச் செயல்களை விரித்துணர்த்தி, அவன் பாலாற்றங்கரையில் பரிவேட்டையாடுதற்குப் புறப்பட்ட செய்தியையும் கச்சியில் அவன் முகாமிட்ட செய்தியுஞ் சொல்லி நிறுத்தினள்.

அப்பொழுது கலிங்கப்போரை நேரிற்கண்ட ஒரு கூளிப்பேய்

> தன்னுடைய கால் தனது பிற்பட மனத்துவகை
> தள்ளி வர

ஓடிவந்து, கலிங்கநாடு முழுதும் கலிங்கரது குருதிவெள்ளம். அதனை

அள்ளியுண்ண வாருங்கள் என்றது. உணங்கிப்போன வயிறுகள் குளிரும்படி குருதியை உவந்து பருகுதற்கு

கணங்கள் எழுக! எழுக! கணங்கள் எழுக! எழுக!

என்று கூவிற்று. கேட்ட உவகையால் மெய்ம்மறந்திருந்த பேய்களை நோக்கி 'பாவிகளே, சும்மா இருக்கிறீர்களே, அங்கே பருந்தும் கழுகும் பிணத்தை யுண்டு வயிறுகள் பீறிப்போயினவே' என்று அலறிற்று.

என் செயப் பாவிகாள் இக்கிருப்பதங் கிதற்குமுன்னே
வன் சிறைக் கழுகும் பாறும் வயிறுகள் பீறிப்போன

என்று அலறிற்று. அங்கே கிடக்கிற பிணமுதலியவற்றைப் பார்த்தால் உங்களுக்கு 'வயிறுகள் போதா; வாய்களும் போதா; எயிறுகளும் போதா' என்று இரங்கிற்று. இவற்றையும் தீராப்பெரும்பசியையும் பிரமாவைவேண்டிப் பெறவேண்டும் என்றது.

இந்த மகிழ்ச்சிச் செய்தியைக் கேட்ட பேய்கள் உடல் பருத்தன; சிரித்தன; ஒன்றன்மேலொன்று விழுந்தன; இச்செய்தியைக் கொணர்ந்த கூளிப்பேயை முத்தமிட்டன. ஒக்கலில் தாங்கிய பிள்ளைகள் கீழே விழவிழத் துணங்கைக் கூத்தாடின; வள்ளைப்பாட்டுப் பாடின. தேவியை வாழ்த்தின. கனவுரைத்த பேயினைத் தம்தம் கழுத்தின்மேல் ஏற்றிக்கொண்டு ஆடின. இச்செயல்களெல்லாம் மக்கள் செயல்களை நமக்கு நினைப்பூட்டி அரூத பெருநகையை விளைக்கின்றன.

இவற்றையெல்லாம் கண்டுகொண்டிருந்த தேவி கூளிப்பேயை நோக்கி, 'போர்நிகழ்ச்சியை உள்ளபடி சொல்லுக' என்று கட்டளையிட்டனள். கூளியும் கச்சிநகர்க் கொலுவிலிருந்து தொடங்கி அபயனது ஏவல் தாங்கிச் சென்ற கருணாகரனது படையெழுச்சியையும் போர்நிகழ்ச்சியையும் அவனது மீட்சியையும் விஸ்தரித்துக் கூறி முடித்தது.

பின்னர் தேவி இத்தகைய களத்தைக் காணவேண்டுமெனக் கருதி, பேய்க்கணங்களுடன் சென்று போர்க்களக்காட்சிகளை யெல்லாம் சுவைபெறுக வர்ணித்துக் காட்டுகின்றாள். ஆனால், அவள் அருள்-நாயகி அல்லவா? அவள் உள்ளத்தே சோகங் குமுறிப் பீறிடுகின்றது.

> பொருதடக்கை வாளெங்கே? மணிமார் பெங்கே?
> போர்முகத்தி லெவர்வரினும் புறங்கொடாத
> பருவயிரத் தோளெங்கே? எங்கே? என்று
> பயிரவியைக் கேட்பாளைக் காண்மின், காண்மின்

இவை இறந்துபட்ட வீரனொருவனுடைய தலைவியின் வார்த்தைகள், இவற்றில் எத்தனை சோகம்! இங்ஙனம் பல காட்சிகளைக் காட்டிப் போர்க் களத்தை முழுதுங் காட்டுதற்கு முடியாதென்று கூறி முடித்துப் பேய்களைநோக்கி 'நீங்கள் அனைவரும் குருதியாடிக் கூழ் அடுங்கள்' என்று அருளினாள். அவைகளும் அவளைக் கும்பிட்டு அவள் கட்டளையை மேற்கொண்டன.

நீராடி, உலர்ந்த ஆடையுடுத்து, ஆபரணம் அணிந்து, தைப் பொங்கல் முதலியன இட்டு நம் பெண்டிர் மகிழ்வார்களல்லவா? பேய்களும் அவ்வாறே செய்கின்றன. முதலிலே பெண்பேய்கள் ஒன்றையொன்று பெயரிட்டு அழைக்கின்றன. குறுமோடி, நிணமாலை, கூரெயிறி, நீலி, மறிமாடி, குதிர்வயிறி என்பன இப்பெயர்கள். இவைகள் குட்டைச்சி, அரிசிப்பல்லி, முதலிய பெயர்களை நினைவூட்டி நமக்கு நகை உண்டுபண்ணுகின்றன. இவைகள் பல்விளக்கி நாக்கு வழிக்கின்றன; நகங் களைகின்றன; எண்ணெய்தேய்த்து அதனை வெண்மூளையைத் தேய்த்துப்போக்கிக் குருதிமடுவிலே பாய்ந்து நீராடுகின்றன. குருதிக் குட்டங்களிலே அம்பும் வேலும் குந்தமும் நிரம்பியிருத்தலால் கரையிலிருந்து குளிக்கும்படி எச்சரிக்கப்படுகின்றன. ஆழ்ந்த குருதிமடுவிலேநீந்தி நெடுநேரம் அமிழ்ந்து விளையாடாமல் விரைவிற் கரையேறிக் கலிங்காது கலிங்கங்களை (ஆடைகளை)ப் புனைந்துகொள்ளும்படி ஏவப்படுகின்றன. பின்பு

சூடகம், பாடகம், விடுகம்பி, கருநாண், இரட்டைவாளி, பாகுவலயம், ஏகாவளி, வன்னசரங்கள் முதலிய அணிகளை அணிகின்றன. ஆனால் இவ்வணிகள் பிணக்குவியலினின்றும் கிடைத்த கோளகை, பாராவளை, முரசம், யானைத்துதிக்கை முதலியவற்றால் அமைந்தன. பெண் பேய்கள் தங்களை அலங்கரிக்கத் தொடங்கினால் எளிதில் அது முடியுமா? நேரம் ஆய்க்கொண்டேயிருந்தது; பசிவெப்பமோ மிகுதியாயிற்று. 'அலங்காரம் போதும்; கூழ் சமைக்க வாருங்கள்' என்று ஒரு குரல் வர, பேய்கள் எல்லாம் சமையல்வேலையில் முயன்றன.

யானையின் பிணமலைமேலே, வானிற் பறக்கின்ற கழுகின் சிறகாகிய மேற்கட்டியின் கீழே, அடுப்பு அமைக்கப்பட்டது. பொழி மதத்தால் நிலத்தைமெழுகி, கொம்பினின்றுதிர்ந்த முத்துப்பொடியால் கோலமிட்டு, மத்தகங்களை அடுப்புக்கட்டி ஆக்கி, ஆனைப் பானையை அடுப்பிலேற்றி குதிரையினுதிரத்தை உலையாகச் சொரிந்து பட்டவீரரின் கண்களிலுள்ள கோபக்கனலால் நெருப்பு மூட்டி, குந்தம் சோல் முதலியவற்றை விறகாக எரித்தன. உலையிலிடும் அரிசியாகக் கலிங்கவீரர்களின் பற்கள் கொள்ளப்பட்டன. அவற்றைத் தீட்டுதற்கு முரசமே உரலாகவும் யானைத்தந்தம் உலக்கையாகவும் அமைந்தன. அரிசி தீட்டும்போது அரசனைப்புகழ்ந்து அப்பெண்பேய்கள் வள்ளைப்பாட்டுப் பாடின. தீட்டி முடிந்ததும் சல்லவட்டத்தைச் சுளகாகக்கொண்டு தவிடு போகப் புடைத்தன. அப்பறுத்தூணிகளை நாழிகளாக்கி, தூணிமாவைக்கலந்து, பெரிய விற்கூடைகளால் அரிசியை முகந்து, உலையிற் பெய்தன. இவ்வாறு கூழ் சமைத்து முடிந்தது. சமைப்புப் போதுமாவென்று நோக்கி ருசிபார்த்து, கூழைத்துடுப்பால் துழாவித் துழாவி வடித்தன. குருதிப்போற்றிலே தண்ணீர்நடுத்தவைத்துக்கொண்டு, உண்ணுமிடத்தைக் குதிரைவாலால் தூர்த்து, குருதிநீர் தெளித்துத் தூய்தாக்கின. உண்கலமாக மண்டலீகரின் தலைமண்டைகள் உதவின. பொற்கலங்களும் வெள்ளிக்கலங்களும் அமைத்துக்கொள்ளப்பட்டன. கூழைப் பகிர்ந்து வார்ப்பதற்கு உதவிய அகப்பைகள் வேல் பாய்ந்த தலைகளே.

பரிசு படவே கலம் பரப்பிப்
பந்தி பந்தி படவுங்கள்
வரிசை யுடனே யிருந்துண்ண
வாரீர் கூழை வாரீரே

என்று அழைக்க, பேய்களெல்லாம் இருந்துண்ணத்தொடங்கின. கூழைப்படைப்பதற்கு அவ்வேலையில் முன்னமே பயிற்சி பெற்ற பேய்களும் முன்வந்தன.

உண்ணுதற்கு முன் அந்தணர் துறவிகள் முதலானோர்க்குப் பிசைஷயளித்தல் நம் நாட்டு மக்களது மாபல்லவா? இந்த மாபு பேயினத்தார்க்குள்ளும் வழங்கியதாம். அவ் வினத்தார்க்குள்ளும் அந்தணப்பேய், சமணப்பேய், புத்தப்பேய் முதலியன உண்டாம்! அந்தப் பேய்களுக்கெல்லாம் பிசைஷயளிக்கப்பட்டன. அந்தணப் பேயைக்குறித்து இந்நூல்

அவதி யில்லாச் சுவைக் கூழ்கண்டு அங்காந் தங்காந் தடிக் கடியும்
பவதி பிட்சாந் தேஹி யெனும் பனவப் பேய்க்கு வாரீரே

எனக் கூறுகின்றது.

கூன், குருடு, ஊமை முதலிய ஊனங்களுடைய பேய்களுக்குக் கூழ் அளிக்கப்பட்டது. ஞெலிப்பேய் தனியாகக் கவனிக்கப்படுகிறது. பிறவி மூடப் பேயும் அவ்வாறே. இந்தப் பேய் ஓட்டைக் கலத்தை யெடுத்துக் கூழ்வாங்கிற்று. அது ஒழுகுவதைக் கண்டு கலத்தை மறித்துப் பார்த்ததாம்; திகைத்துப்போயிற்றும்! ஒரு கூத்திப் பேயின் செயலைக்கண்டு எல்லாப் பேய்களும் சிரித்தனவாம். இந்தப் பேய் தன் கணவன் உண்ணுனென்று சொல்லி, தனக்கும் அவனுக்கும் படைத்த கூழை யெல்லாம் தானேயுண்டு குலுங்கடித்ததாம்!

தடியால் மடுத்துக் கூழெல்லாம்
தானே பருகித் தன்கணவன்
குடியா னென்னக் குலுங்கடிக்கும்
கூத்திப் பேய்க்கு வாரீரே

என்று இது குறிக்கப்படுகிறது. இப்பகுதி நகைச்சுவையின் சிகரமாய் அமைந்துள்ளது. ஞாபகத்தோடு வார்ப்பேய்க்கும், கனவுகண்ட பேய்க்கும், கணக்கப்பேய்க்கும் கூழ்வார்த்து, பின் பேய்கள் உண்டு முடித்து வாய்பூசித் தாம்பூலம் தரித்தன. குதிரையின் செவிச் சுருள்தான் வெற்றிலை; அதன் பாடுதான் பாக்குப் பிளவு; கலிங்க வீரரது கண்ணிலுள்ள வெள்ளைதான் சுண்ணாம்பு.

இவ்வாறு உண்டு களித்து, ஏப்பமிட்டு, பேய்களெல்லாம் கும்பிட்டு நடனமிட்டன. இந்நடனங்களிலும் போர்க்கள நிகழ்ச்சிகளையே புலப்படுத்தின. நடனமுடிந்தபின் அபயனை வாழ்த்திப் பரணிநாளைக் கொண்டாடின.

நம் செயல்களிலே நாம் நகைச் சுவையைக் காணுதல் பெரும்பாலும் இல்லை; வேறொருவன் காட்டினால் அவனை வெறுப்போம். பிறரிடத்தே நகைப்புக்குரிய செயல்களைக் கற்பித்து அச்சுவையையுண்டு பண்ணுதல் மிகச் சாதாரணமான அனுபவம். விலங்குகள், பறவைகள் முதலியவை மக்களின் இயல்புடையன என்று கருதி, அவற்றின் செயல்களிலே நகைச் சுவை முதலியவற்றை ஓர் ஆசிரியன் காண்பித்தல் அவனது பாவனாசக்தியின் ஒரு சிறப்பாகும். நமது தேசத்துப் பஞ்சதந்திரக் கதைகளும், கிரேக்க தேசத்து ஈஸாப் கதைகளும் தக்க சான்றுகளாம். இரண்டும் உலகப் பிரஸித்தமானவை. காணமுடியாத பேய்களைச் சிருஷ்டித்து, உயிருள்ள உண்மைப் பிறவிகள் போலக் கண்முன்னே நிகழ்வித்து, நகை முதலிய பலவகைச் சுவைகட்குமுரிய செயல்களை அவைகளிடத்தே கற்பித்து அச் சுவைகளைக் காட்டி மகிழ்வித்தல் மிக அரியதோர் பாவனாசக்தியின் விளைவாம். இவ்வகைப் பாவனாசக்தி படைத்தவர் கவிச்சக்கரவர்த்தி ஜயங்கொண்டார். இந்த அரிய சக்தியின் விளைவாகத் தோன்றியது கலிங்கத்துப் பரணி என்ற சிறந்த நூல்.

போர்க்களத்தைப் பாடுதலில் பேயுலகமொன்றைச் சிருஷ்டித்தல் எதற்கு என்று கேட்கலாம். அரசனுக்கு வெற்றியுண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்கப்படும் தெய்வம் காளிதேவி. இவ

எந்த பரிவாரமாகப் பேய்களைத்தான் நமது புராணங்கள் கூறுகின்றன. அன்றியும் போர்க்களத்தில் பிணங்களைத் தின்பதற்குக் கழுகு, பருந்து, நரி முதலியன மிகுதியாய் வருதல் இயற்கை. இவற்றுடன் பேய்களும கூடிநின்று அழிந்த பிணங்களைத் தின்னும் என்பது நமது நம்பிக்கை. இதனுல் வெற்றி வர்ணனையிலும் போர்க்கள வர்ணனையிலும் பேயுலகம் நிரந்தரமாக ஓர் இடம் பெற்று விட்டது.

மேலும் மக்களுள் எவராலும் நேரிற்கண்டு உரைக்க முடியாத பல காரணங்களும் சோழ அரச பரம்பரை வர்ணனை முதலியவற்றில் வருகின்றன. அமானுஷ்யமான இச் செயலைச் செய்வதற்கும் அமானுஷ்ய வியக்திகளே வேண்டும்.

கவித்வ முறையில் நோக்கினுல் உண்மையுலகில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சி யொன்று மக்கள் மனத்தில் வேரூன்றி நிலை நிற்பதற்கு அமைத்துக்கொண்ட உபாயமென்று இச் சிருஷ்டியைக் கருதலாம் உண்மையுலகைக் காட்டினும் பாவனை யுலகு மனத்தை எளிதிற் பற்றி நின்று ஒரு காலத்தும் மறைந்து விடாதல்லவா?

ஒரு கோர யுத்தத்தின் நிகழ்ச்சிகள் நமக்கு அச்சமும் அருவருப்பும் விளைக்கும். இச்சுவையுணர்ச்சியை மாற்றினுலன்றி, நமது மனம் அமைதி பெறமாட்டாது. இங்ஙனம் மாற்றி இடையிடையே நகைச்சுவை விளைத்தற் பொருட்டே செயங்கொண்டார் ஒரு பேயுலகினைச் சிருஷ்டித்தார் எனத் தோன்றுகிறது.

இவ் அரிய நூலிலேயுள்ள நகைச்சுவை யொன்றைத்தான் இங்கே கூறினேன். இதன்கண் எத்தனையோ இலக்கியச்சுவைகள் உள்ளன. தமிழிலக்கியங் கற்பவருக்கு அவை யென்றும் மிக்க இன்பத்தைத் தரத்தக்கன.